**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.41/2023

பெயர்–திரு.ரவிசங்கர் நாள்.26.06.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

**1.**நான் பி`எஸ்சி வரை படித்துள்ளேன். தாவா சொத்து எனக்கும் எனது தந்தைக்கும் பட்டா வகையில் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து. தாவா சொத்துஎனது அப்பா பெயரில் இருந்தது என காட்ட பழைய வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி வைதேகி மற்றும் அவரது தாயார் கிருஷ்ணவேணியை தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. தாவா சொத்து ஆரம்பத்தில் 1ம் பிரதிவாதி கிருஷ்ணவேணிக்கு சத்தியமங்கலம் சார்பதிவக கிரை ஆவண எண்.2986/1969 மற்றும் 2608/1971 ஆவணங்கள் படி சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

2.தாவா சொத்தில் மேபுறத்தில் ஒரு பாகத்தில் எனது தந்தை S.S.மணி 1ம் பிரதிவாதியின் தாயாரான கிருஷ்ணவேணியிடம் இருந்து 430 சதுர அடி நில நிலமும், அதில் கண்ட கதவு எண்.9/217 வீடும் கிரைய ஆவண எண்.2237/1989ன் படி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தந்தை கிரையம் பெற்ற 430 சதுர அடி பூமியை தவிர மற்ற பகுதிகள் கிருஷ்ணவேணி பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் தாக்கல் ஆகி உள்ளது என்றால் சரியல்ல. 1989க்கு பின் 430 சதுர அடி எனது தந்தை கிரையம் பெற்றுள்ளதால் தான் எனது தந்தையின் பெயரும் பட்டாவில் கூட்டாக வருகிறது என்றால சரியல்ல. தாவாசொத்தை நான் வீடு கட்டி வாடகைக்கு விட்டிருந்தேன். தற்போது புதுப்பிப்பதற்காக வீடுகளை இடித்து விட்டேன். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீர்ணம் 3.25 முதல் 3.50 செண்ட் வரை இருக்கும் . தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியவில்லை என்றாலும், வழக்கிற்காக தாவா சொத்தின் விஸ்தீரணம் 4.50 செண்ட் என்பதை மறைத்து 3.50 செண்ட் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் படி சர்வே எண்.96 ஆகும். வா.சா.ஆ.1 ஆவணம் எனது தந்தை இறந்த பிறகு 14.11.2019ல் எனது தந்தை பெயரில் மட்டும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது பெயரில் பட்டா மாறுதல் செய்திருக்கிறேன்,. எப்போது பட்டா மாறுதல் செய்தேன் என்றால் எனக்கு நியாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணப்படி எனது பெயரில் கடந்த 11.06.2020ல் மனு செய்து 16.06.2020ல் எனது பெரில் பட்டா மாறுதல்

பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 16.06.2020 தேதியிட்ட சத்தியமங்கலம் வட்டாட்சியர் பட்டா மாறுதல் உத்திரவி பி.வா.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. பட்டா மாறுதலுக்கு நான் தான் விண்ணப்பம் செய்தேன் என்றால் சரிதான். பட்டா மாறுதலுக்கு முன்பு எனது தந்தை S.S. மணி மற்றும் 1ம் பிரதிவாதி தாயார் கிருஷ்ணவேணி பெயரில் கூட்டாக பட்டா வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால், அது தவறான ஆவணமாகும்.

4.கிருஷ்ணவேணி பெயரை எதன் அடிப்படையில் நீக்கப்பட்டது என எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் ஆணை 16.06.2020ல் வழங்குவதற்கு முன்பாகவே 14.011.2019ல் வா.சா.ஆ.1ன் மூலம் செட்டில்மெண்ட் ரெஜிஸ்டர் எனது தந்தை பெயரில் மட்டும் தனியாக போலியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் முன் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ1ன் அடிப்பையில் தான் வா.சா.ஆ.3 ஏற்படுத்தியுள்ளேன்.

5.எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட 430 சதுரடி தவிர கிருஷ்ணவேணிக்கும் பாத்தியப்பட்ட இடத்திற்கும் சேர்ந்து போலியாக ஆவணம் ஏற்படுத்தி பாகபாத்திய விடுதலை ஆவணம் வா.சா.ஆ,.3 ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு மக்கள் நீதிமன்றத்தில் மோசடியாக வா.சா.ஆ,4 மக்கள் நீதிமன்ற உத்திரவை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில காலம் சென்ற பாப்பாத்தி எந்த இடத்தில் குடியிருந்து வந்தார் என்றால் தாவா சொத்தின் முன் பகுதியில் குடியிருந்து வந்தார். அவரது மறைவிற்கு பிறகு அவரது மகன் குடியிருந்து வருகிறார். தாவா சொத்தில் காலம் சென்ற 2ம பிரதிவாதி 1981ம் வருடம் 1ம் பிரதிவாதியின் தாயார் கிருஷ்வேணியிடம் போக்கியத்திற்காக ரூ.4000 செலுத்தி குடிவந்தார் என்றால் சரியல்ல. மேற்படி பாப்பாத்தி குடியிருந்து வந்த வீட்டின் விஸ்தீரணம் 1.6 செண்ட் அந்த இடம் தென்கிழக்கு மூலையில் உள்ளது என்றாலும் அந்த வீட்டின் கதவு எண்.430 என்றாலும் சரியல்ல.

6.தாவா பிராதில் 3ம் பிரதிவாதி விலாசத்தை தாவா சொத்து விபரத்தில் உள்ள முகவரிப்படி கோட்டுவீராம்பாளையம் கடைவீதி கதவு எண்,430 என குறிப்பிட்டு விட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ,5ல் டவுன் சர்வே ரிஜிஸ்டரில் கதவு எண்.430 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2, 3ம் பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வந்த வீட்டை பொறுத்து வா.சா.ஆ.3 பாகப்பாத்திய விடுதலை ஆவணத்திலும், , வா.சா.ஆ.4 மக்கள் நீதிமன்ற உத்தரவிலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். கதவு எண்,430வீட்டிற்கு காலம் சென்ற பாப்பாத்தி தான் 30 ஆண்டுகளாக வீட்டு வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல.

7.2ம் பிரதிவாதி பாப்பாத்தி காலம் சென்ற கிருஷ்ணவேணியிடம் போக்கியத்திற்காக குடியிருந்து வந்து, சொத்தில் இருந்து சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.349/1987 என வழக்கு தாக்கல் செய்து

அவ்வழக்கில் பாப்பாத்திக்கு ஆதரவாக ஒருதலைபட்ச தீர்ப்பானை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 15.03.2023 அன்று பிரதிவாதிகள் என்னை தாவா சொத்தில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்ததாக குறிப்பிட்டுள்ளதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால், புகார் கொடுத்துள்ளேன். மேற்படி புகார் ஆவணத்தை தாக்கல் செ்துள்ளேனா என்றால செய்திருப்பேன்.

8.பிரதிவாதிகளுக்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என கூறிவிட்டு எனது முதல் விசாரணையில் 2, 3 பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருப்பதாக முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மக்கள் நீதிமன்றத்தில் தீர்ப்பாணை பெற்ற வழக்கான மாண்பமை சார்பு நீதிமன்றம் சத்தியமங்கலம் அ.வ.எண்.85/2021 வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்பதால் அ.வ.எண்.85/2021 தீர்ப்பாணை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட தாவாசொத்தின் 430 சதுரடி தவிர மீதமுள்ள சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க எனக்கு எந்த உரிமையும் அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் மற்றும் ஆவணங்களின் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எனது வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 முதல்15 வரை நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் காலம் சென்ற கிருஷ்ணவேணியின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்களாக சேர்க்காமல் 1ம் பிரதிவாதியை மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளதால் எனது வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை பராமரித்து வந்த நிலையில், 1ம் பிரதிவாதி 2018 முதல் 2022 வரை வெளியூரில் இருந்ததை சாதகமாக பயன்படுத்தி தாவா சொத்திற்கு போலி ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.06.29 16:01:04 +0530

District Munsif